**முல்லைத்தீவு மாவட்டத்தின் பத்து கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் - 2022**

---

## 1 கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 முல்லைத்தீவு மாவட்டத்தின் பத்து கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆண்டிற்கான முல்லைத்தீவு மாவட்டத்தின் 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பளிப்புள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 04 நிறைவேற்றுக் குழுக்களினால் மீளாய்வாண்டில் நிலையங்களினால் செலுத்தப்பட்டிருந்த காலபோகத்திற்கான கனிம உரம் இறக்குவதற்கான கூலிகள் கூட்டு மொத்தம் ரூபா. 1,960,529 மூன்று உரக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவை நிதிக்கூற்றுக்களில் முற்றாக விடுபட்டிருந்தது. | 2023 ஆண்டு கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| **அரச நிதி சுற்றறிக்கை** | | | |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி - | 08 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் காசு, காசோலை மற்றும் களஞ்சியங்கள் தொடர்புடைய | உத்தியோகத்தர் விபரம் ஆணையாளர் நாயகத்திற்கு | உத்தியோத்தர் களிடம் பிணைப் பணம் பெற்றுக்கொள்வ |

| | | | |
|---|---|---|---|
| II இன் பந்தி 9.1 | உத்தியோத்தர்களிடமிருந்து பிணையங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | தற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 8,960,425 இற்கான பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,586,615 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளின் ரூபா 18,626,190 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | துணுக்காய் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் கமக்கார அமைப்புக்கு செலுத்த வேண்டிய சிறுபோக தண்டப்பணம் கூட்டுமொத்தம் ரூபா 595,950 தொகை தீர்க்கப்படாதிருந்தது. | உரியமுறையில் செலுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தீர்ப்பனவு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 04 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் நிலுவை குத்தகை வாடகை கூட்டுமொத்தம் ரூபா 1,721,050 கடந்த 04 தொடக்கம் 10 ஆண்டுகளாக அறவிட ப்பட்டிருக்கவோ அன்றேல் குத்தகை க்காரர்களிடமிருந்து உழவு இயந்திரங்களை பறிமுதல் செய்யப்படவோ ஆக்கபூர்வமான நடவடி க்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உழவு இயந்திரங்களை மீளப்பெறுமாறு சகல கமநல சேவை நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிலுவை குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 04 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் கூட்டு மொத்தம் ரூபா 2,017,950 வருமதிகள் மற்றும் ரூபா 3,716,995 சென்மதிகள் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதும், கடந்த 10 ஆண்டுகளாக அது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாக சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.2 வாகன தொகுதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 121 உழவு இயந்திரங்கள் நிலையங்களினால் உபயோகிக்கப்பட்டு தற்போது பழுதுபார்த்தல்கள், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காது கடந்த 01 தொடக்கம் 11 ஆண்டுகளாக வாகனத் தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன. | ஏல விற்பனை செய்வதற்கு அல்லது திருத்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழுதுபார்த்து உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதுகுடியிருப்பு கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த கூட்டுமொத்தம் ரூபா 11,722,959 இற்கான 09 உருப்படிகள் நடைமுறையல்லாத சொத்துக்கள் நிலையத்தின் பேரில் உரித்தாக்கியிருக்கவில்லை. | உரிய முறையில் கையளிப்பு செய்யப்பட்ட பின்னர் நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்தாக்கிக் கொண்டு பயன்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | துணுக்காய் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் 2021 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் கொல்லங்குள அணைக்கட்டுப் புனரமைப்பு மற்றும் துருசு நிர்மாணித்தல் வேலைகளுக்காக கூட்டுமொத்தம் ரூபா 5.65 மில்லியனுக்கு நிறைவேற்றப்பட்டிருந்த வேலைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | குள அணைக்கட்டுப் புனரமைப்பின் போது குளத்தின் நீரேந்து பகுதியில் குவிக்கப்பட்டிருந்த வண்டல் மண்படையினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 15.11.2023 இற்கு முன்னர் அகற்றுவதற்கான அறிவுறுத்தல் ஒப்பந்த கமக்கார அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. | உரிய முறையில் வண்டல் மண்படை அகற்றப்பட்டு நீர் வழங்கல் சீராக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | ரூபா 2.01 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அணைக்கட்டு புனரமைப்பிற்கு உபயோகிக்கப்பட்ட மண் தரப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்காமை மற்றும் மண் | ஆறு இடங்களில் காணப்பட்டும் வெடிப்புகள் சீர் செய்யுமாறு என்னால் | குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுவதற்கு ஆக்கபூர்வமான |

| | | | |
|---|---|---|---|
| | இறக்கப்படுத்தல் உரிய அளவுகளில் மேற்கொள்ளப்படாததால் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. | 281/13/02/10/103 ஆம் இலக்க 10.01.2023 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படதற்கு அமைவாக குறித்த சீரமைப்புகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| | (iii) குளத்துக்கு கூட்டுமொத்தம் ரூபா 1.23 மில்லியன் கிரயத்தில் இரு துருசுகள் அமைக்கப்பட்டிருந்தும் குளத்து நீரினை வெளியேற்றுவதற்கான வாய்க்கால்களை அமைக்க தவறியமையால் 15 ஏக்கர் வயல் நிலப்பரப்புக்குரிய நீர் விநியோகம் தடைப்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. | நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | நீர் வெளியகற்றும் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு நீர் விநியோகம் சீராக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | புதுக்குடியிருப்பு கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் 2021 ஆம் ஆண்டில் ஏற்று நீர்த்தாங்கி அமைத்தல் நீரிறைக்கும் இயந்திரம் கொள்வனவு மற்றும் மின்னிணைப்பு வேலைகளுக்கு கூட்டுமொத்தம் ரூபா 925,944 செலவு ஏற்படுத்தப்பட்டிருந்தும் அவை கடந்த 18 மாதங்களாக மின்னிணைப்பு பெற்றுக் கொடுக்கப்படாதுமிருந்தது. மேலும், கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் பௌதீகச் செவ்வை பார்த்தலுக்குக் கிடைத்திருக்கவுமில்லை. | நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்துவதற்குரிய மின்னினைப்பு வசதிகளை ஏற்படுத்தி நீர் இறைக்கும் இயந்திரத்திரத்தை விரைவாக பொருத்துமாறு உரிய கமக்கார அமைப்பு மற்றும் கமநல அபவிருத்தி உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | மின்னிணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு நீரிறைக்கும் இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | ஒட்டுசுட்டான் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் ONUR திட்டத்தின் நிதியளிப்பு மூலம் கூட்டுமொத்தம் ரூபா 5,981,378 செலவில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தனியார் நிறுவன ஒப்பந்தகாரரினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்த கருவேப்பமுறிப்பு குளக்கட்டு புனரமைப்பு மற்றும் அதற்கான கலிங்க வேலைகள் தொடர்பில் கீழ்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டிருந்தன. | | |
| | (i) இக்குளத்துக்கு ரூபா 1,000,215 செலவில் இரு துருசுகள் மற்றும் கொங்கிறீற்று வடிகால் அமைக்கப்பட்டிருந்தும் இவ் வடிகாலின் மூலம் 41 ஏக்கர் விஸ்தீரணமுடைய வயல்களுக்கு குளத்துநீரினை பெற்றுக் கொடுப்பதற்கான வாய்க்காலினை புனரமைப்பு செய்வதற்கு 04 ஆண்டுகளாக கமநல சேவை நிலையத்தினால் நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்காது வடிகாலானது காட்டுப்புறத்தில் பயனற்றுக் காணப்பட்டது. | குறித்த பிரதேசத்திற்கு அந்த வாய்க்காலினை பயன்படுத்தி 196 ஏக்கர் பெரும்போகத்திலும் 25 ஏக்கர் சிறுபோகத்திலும் பயிர் செய்யப்பட்டிருந்தது. வருகின்றது. | நீர் வாய்க்கால்களினை புனரமைக்கப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இக்குளத்துக்கான நீர் வரத்துக்குப் பல்வேறுபட்ட வெளித்தரப்பினர்களால் தடைக்குள்ளாக்கப்பட்டிந்தமையால் ஆகக் குறைந்தளவு நீரினையும் நெற்செய்கைக்கு பெற்றுக் கொடுக்கமுடியாதிருந்தமையினால் குளப்புனரமைப்பின் மூலம் 41 ஏக்கர் நிலத்தில் சிறுபோககாலத்தில் பயிர்ச்செய்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர் விநியோகம் சீர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | தடைகள் சீராக்கப்பட்டு நீர் விநியோகம் பெற்றுக் கொடுக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநலஅபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிப்பதற்கு ஒழுங்குக் செய்யப்படும். | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 1981 அக்டோபர் 16 திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினது 107 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின் பந்தி 09 இன் பிரகாரம் 01 தொடக்கம் 16 வரையான வருமானங்கள் சரிவர இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான வருமானமதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பாதீடு உரியமுறையில் தயாரிக்கப்படும் | வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் வருமானங்களையுள்ளடக்கியதான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு நிலையத்தினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்த கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 05 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த முன்னேற்றங்கள் அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்த கொள்ளும் பொருட்டு தேவையான செயற்பாடுகளை அடையாளம் காணப்பட்டு செயற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை |

எடுக்கப்படுதல் வேண்டும்.

## 5. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின 2012 தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு 75 விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த விவசாயக் கடன்கள் கூட்டுமொத்தம் ரூபா 1,263,582 மற்றும் தண்ட வட்டி ரூபா 15,194 என்பன அவர்களிடமிருந்து 02 தொடக்கம் 08 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுகின்றது. | நிலுவையாகவுள்ள விவசாயக்கடன்கள் அறவிடப்படடிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |